# அனைத்துலக நகரத்தார் மாநாடு (ICN) குறித்த செய்திகள்

1. சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு 2007-ம் ஆண்டு டிசம்பர் 7 முதல் 9-ம் தேதி வரை நடைபெற உள்ள இம்மாநாட்டின் ஏற்பாடுகள் முழு மூச்சில் நடைபெற்று வருகிறது.

2. அதன் முதல் கட்டமாக நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு, அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

3. நிகழ்ச்சி நிரலுடன் அனுப்பப்பட்டுள்ள மனுவை பூர்த்தி செய்து செப்டம்பர் மாதம் 15-ம் தேதிக்குள் பதிந்து கொள்வோர் சிறப்பு சலுகை கட்டணமாக நபர் ஒன்றுக்கு RM240 செலுத்தினால் போதும். எனவே அனைவரும் விரைந்து பதிந்து கொள்ள வேண்டியது.

4. சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னதுரை அவர்கள் RM 1,001 செலுத்தி பதிவை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். அவர்களுக்கு நம் நன்றி.

5. இந்த குறுகிய கால இடைவெளிக்குள் இது வரை 18 பேர் பதிந்து கொண்டுள்ளார்கள்.

6. ஏற்பாட்டுக்குழுவை சேர்ந்த 8 உறுப்பினர்கள் கடந்த 23-6-2007 அன்று சிங்கை நகரத்தார் சங்கம் ஏற்பாடு செய்த கலை விழாவில் கலந்து கொண்டு சிங்கப்பூரில் இந்த மாநாட்டை அறிமுகம் செய்தார்கள். சிங்கை நகரத்தார்கள் திரளாக வந்து கலந்து கொள்ளவதாக உறுதி அளித்துள்ளார்கள். சிங்கை நகரத்தார்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக போக்கு வரத்து மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய ஒரு பயண திட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தகவல் பெற சிங்கை நகரத்தார்கள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சிங்கையில் இருந்து 100 பேராளர்கள் கலந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

7. சிங்கை நகரத்தார்களை சந்தித்து விட்டு திரும்பும் வழியில் கடந்த 24-6-2007 அன்று ஜோகூர்பாரு உறுப்பினர்களை சந்தித்தோம். ஜோகூர் வட்டார செயலாளர் தலைமையில் அங்குள்ள உறுப்பினர்கள் எங்களை கனிவுடன் வரவேற்று உபசரித்தார்கள். மேலும் உடனடியாக 5 உறுப்பினர்கள் மாநாட்டின் கட்டணத்தை செலுத்தி தங்களை பதிந்து கொண்டார்கள். ஜோகூர் வட்டார உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொள்வார்கள் என்று உறுதியும் அளித்தார்கள்.

8. இந்தியாவில் இருந்து இந்த மாநாட்டில் கலந்து கொள்ள சுற்றுலாவுடன் கூடிய பயண திட்டத்துக்கு சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. அதன் விபரம் தனியாக தரப்பட்டுள்ளது. மிகவும் குறைவான கட்டணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் பயணத்தில் 120 பேராளர்கள் மட்டுமே கலந்து கொள்ள இயலும், எனவே உங்கள் உறவினர்கள், நண்பர்கள் இப்பயணத்தில் கலந்து கொள்ள விரும்பினால் உடனே ஏற்பாட்டுக்கு குழுவினரை தொடர்பு கொள்ளவும்.

# செயலகத்திலிருந்து

அன்புடயீர்,
வணக்கம்.

நம் சங்கம் பொன்விழாவை கொண்டாட இருக்கின்ற நேரத்தில் இனி வரும் ஒவ்வொரு செய்திக் கடிதமும் அதன் செய்திகளை தாங்கி வரக் கூடியதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இனி நடைபெற்ற, நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளை தொகுத்து அளிக்கிறேன்.

**24வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 25-3-2007**

மாலை 4.30 மணி அளவில் திரு. M. கிருஷ்ணன் இறை வணக்கம் பாட பொதுக்கூட்டம் தொடங்கியது. சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். (அவர்களின் உரை வேறு ஒரு பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது) 23வது பொதுக்கூட்டக் குறிப்பை செயலாளர் திரு. பெ. இராமன் வாசிக்க அது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு அதுவும் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிறகு பொருளாளர் திரு. S. பழனியப்பன் சென்ற ஆண்டுக்கான கணக்கறிக்கையை தாக்கல் செய்தார்கள். கேள்விகள் ஏதுமின்றி அதுவும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிறகு செயற்குழுவில் காலியாக இருந்த இரண்டு இடங்களுக்கு திரு. M. சேதுராமனும், டத்தோ N. இராமநாதனும் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சங்கத்தின் சட்ட விதிகளில் (7.2, 7.3, 7.4) மாற்றங்கள் செய்வதற்கு செயற்குழு முன் மொழிந்த மாற்றங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நம் சங்க பொன்விழா உத்தேச வரவு செலவு கணக்கு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



July August -07.pmd 4 9/20/2007, 3:57 PM

திரு. M. கிருஷ்ணன் அவர்கள் கோட்டையூரைச் சேர்ந்த திருமதி உமையாள் ஆச்சி அவர்கள் நம் சங்கத்தின் பொன்விழா கொண்டாட்டத்திற்காக ரூபாய் 50,001 நன்கொடையாக வழங்கி உள்ளதாக தெரிவித்தார்கள். நன்கொடை வழங்கிய திருமதி உமையாள் ஆச்சி அவர்களுக்கு இவ்வேளையில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கச் செயலாளர் திரு. பெ. இராமனின் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

## சங்க எழுச்சிப் பாடல் குறுந்தட்டு வெளியீடு

ஆண்டுப் பொதுக்கூட்டத்தை தொடர்ந்து சங்க எழுச்சிப் பாடல் குறுந்தட்டு வெளியீடு கண்டது. சங்கத் தலைவர் திரு. M. சின்னதுரை அதனை வெளியிட டத்தோ S.NK. அழகு சுந்தரம் அவர்கள் கணிசமான தொகை கொடுத்து அதைப் பெற்றுக் கொண்டார்கள். அதனை தொடர்ந்து நம் சங்க உறுப்பினர்கள் பலர் கணிசமான தொகையை வழங்கி குறுந்தட்டினைப் பெற்றுக் கொண்டார்கள்.

சங்கத்தின் எழுச்சிப் பாடலை புலவர் திருமதி கிருஷ்ணப்பன் அவர்கள் எழுதித் தர திரு. L. இராமன் அதனை குறுந்தட்டாக வடிவமைத்து கொடுத்து உள்ளார்கள். இந்த எழுச்சிப் பாடலை நமக்கு எழுதித் தந்த திருமதி சுசிலா கிருஷ்ணப்பன் மற்றும் திரு. L. இராமன், திரு. Y.RM. ஆண்டியப்பன் ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனி வரும் காலங்களில் நம் சங்கத்து அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்த எழுச்சிப் பாடல் இசைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த குறுந்தட்டு விற்பனைக்கு உள்ளது. விலை RM5.00 மட்டும்தான் அனைவரும் இதை வாங்கி ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## விவரக் கையேடு வெளியீட்டு விழா (19-5-2007)

திருமதி PL. உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா தொடங்குவதற்கு முன்பாக மாலை 3.30 மணிக்கு விபரக் கையேடு வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. செல்வி மீனாட்சி இறை வணக்கம் பாட, விவரக்கையேடு குழுவின் தலைவர் திரு. மா. மெய்யப்பன் அவர்கள் அறிமுக உரை ஆற்றினார்கள். அவர்களின் உரையில் “25-3-2007 அன்று வெளியிட திட்டமிட்டு இருந்தது. ஆனால் அந்த தேதியில் வெளியிட முடியவில்லை. காரணம் உறுப்பினர்களிடமிருந்து நாங்கள் சரிபார்த்து அனுப்பச் சொல்லி இருந்த அவர்களைப் பற்றிய விவரங்கள் எங்களுக்கு, பலரிடமிருந்து வந்து சேரவில்லை. செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் வட்டாரப் பிரதிநிதிகளின் உதவியோடு விவரங்கள் திருப்பி அனுப்பாத உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்களை சேகரித்தோம். ஆறு மாத கால அயராத பணியின் பயனாக இந்தக் கையேடு திகழ்கிறது” என்று குறிப்பிட்டார்கள்.

பிறகு சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்கள் உரை ஆற்றினார்கள். அவர்கள் உரையில் "சங்க நடவடிக்கைகளில் மிகப் பெரிய திட்டம் இந்த விபரக்கையேடு வெளியிடும் திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. அது வெகு சிறப்பாக வெற்றி பெற்று இருக்கிறது. இந்த விபரக் கையேட்டு குழுவினர் நம் சங்க கட்டிடத்தில் இரவு 12 மணி வரை சில நாட்கள் இருந்து பணியாற்றி இருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். விளம்பரங்கள் கொடுத்து உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், விபரக் கையேடு தயார் செய்த குழுவினருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்" என்று கூறினார்கள்.

டத்தோ P. காசி அவர்கள் கையேட்டை வெளியீடு செய்ததோடு கணிசமான தொகையினை வழங்கி முதல் விபரக் கையேட்டினை தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

ஒரு விவரக் கையேட்டின் விலை RM 15.00. தேவைப்படுவோர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

இந்த விவரக் கையேட்டுடன் முதன்முறையாக "மலேசிய நகரத்தார் வர்த்தக கையேடும்" இணைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிதவித்துக் கொள்கிறேன்.

## பொன்விழாக் கொண்டாட்டத்தின் அறிமுக விழா (1.9.2007)

நம் சங்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் அறிமுக விழா எதிர் வரும் 1-9-2007 அன்று முழுநாள் நிகழ்ச்சியாக கிள்ளான் ஸ்ரீ நகர தண்டாயுபாணி கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம். அதன் விவரம் தனியாக தரப்பட்டுள்ளது.

## செயற் குழுவில் மாற்றம்

செயற்குழு உறுப்பினராக பணியாற்றி வந்த திரு. N. சோமநாதன் உதவிப் பொருளாளராகப் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

## பொன்விழாக் கொண்டாட்டம் டிசம்பர் 7, 8, 9

நம் சங்கத்தின் பொன் விழாக் கொண்டாட்டம் எதிர்வரும் டிசம்பர் திங்கள் 7,8,9 தேதிகளில் நடைபெற உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கும் கொள்கிறோம். அதன் முழு விபரம் அனைவருக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டது.

மீண்டும் அடுத்த செய்திக் கடிதத்தில் சந்திப்போம்.

அன்புடன்
**பெ. இராமன்**
கௌரவச் செயலாளர்



July August -07.pmd 6 9/20/2007, 3:57 PM

# பொன்விழா கொண்டாட்டம்

*காலங்கள் மாறலாம் கருத்துக்கள் மாறலாம்*
*சாலைகள் மாறலாம் சட்டங்கள் மாறலாம்*
*ஆனால் என்றுமே மாறாதது மலேசிய*
*தனவைசிய சங்கத்தின் பணி!*

*மலையகத்து நகரத்தார்கள்*
*மாண்புடனே திகழ்வதற்கு*
*பண்புடனே நீ தோன்றி*
*பல ஆண்டு ஆனாலும்*

*பாசத்துடன் உனை வளர்த்த*
*பாங்கான தலைவர்களை*
*நேசத்துடன் நினைக்கிறோம்*
*உன் பணியை தொடர்வதற்கே!*

*உன் புகழை உலகுக்கு சொல்லி*
*உன்னை வளர்த்த நகரத்தார்கள்*
*ஒன்றாக கூடி கொண்டாடும்*
*நன்னாள் தான் பொன் விழா நாள்!*

*அந் நாளை திருநாள் ஆக்கி*
*எந்நாளும் நினைவில் நிலைக்க*
*பன்னாட்டு நகரத்தார்கள் புடைசூழ*
*பார் போற்ற கொண்டாடுவோம் வாரீர்!*

**ஆக்கம்: பெ. ராமன்**
**கௌ. செயலாளர்**

## விளக்கம்

சென்ற இதழின் ஆசிரியர் பக்கத்தில் தென் மாநிலம் குறித்து ஒரு செய்தி வெளியிடப்பட்டு இருந்தது. அந்த செய்தி தொடர்பாக அங்கு வசிக்கும் நகரத்தார்கள் மறுப்பு தெரிவித்து உள்ளார்கள். சென்ற இதழில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் யாருடைய மனதையும் புண்படுத்தும் எண்ணத்தில் வெளியிடப்பட்டவை அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

*- சங்க செயற்குழு*

### விவரக்கையேடு அறிவிப்பு

19-5-2007 அன்று விவரக் கையேடு வாங்கியவர்கள் இந்த இதழுடன் அனுப்பியுள்ள பக்கம் எண் 156யையும் (ஏற்கனவே விடுபட்டுள்ளது) பக்கம் 183யையும் (ஏற்கனவே உள்ளதில் தவறுதலாக உள்ளது) இணைத்துக் கொள்ளவும். சிரமத்திற்கு வருந்துகிறோம்.

## சதாபிஷேக விழா

கோலாலம்பூர் (தமிழகம், நற்சாந்துபட்டி) திரு. சித. இராமனாதன் செட்டியார் (உ.எ: 45/ப.எ: 233) அவர்களின் 80 வயது நிறைவு சதாபிஷேக விழா கடந்த 27-7-2007 அன்று செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் மிக விமரிசையாக நடைபெற்றது. அவர்களுக்கு சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறது.



July August -07.pmd 7 9/20/2007, 3:57 PM

# திருமதி PL உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா 2007 (19.5.2007)

மாலை 4.00 மணிக்கு நம் சங்கத்தின் எழுச்சி பாடலுடன் திருமதி PL. உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா தொடங்கியது.

சிரம்பானைச் சேர்ந்த செல்வி நித்யா லெட்சுமி வரவேற்பு நடனத்தை வழங்கினார். திருமதி ராதா கணேசன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள்

நம் சங்க தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அவர்களின் உரையில் இன்று விருதை பெறும் அனைத்து மாணவ மாணவியரும் பல சாதனைகள் புரிந்து நம் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க ஆண்டவன் அருள்புரிய பிரார்த்திப்பதாக கூறினார்கள். மேலும் அவர்கள் உரையில் டத்தோ வீரசிங்கம் அவர்கள் அமைதியான சிறந்த தலைவர் என்றும் மக்களிடம் மிகவும் அன்பாகப் பழகக் கூடியவர்கள் என்றும் அவர்கள் அன்றைய நிகழ்ச்சிக்கு வருகை தந்து இருப்பது நமக்கு பெருமையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

பிறகு விருது வழங்கும் விழாவை திரு. M. பழனியப்பன் அவர்கள் கலகலப்பாக வழி நடத்தினார்கள். UPSR, PMR தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு டத்தின் மல்லிகா காசி அவர்கள் பூங்கொத்து வழங்க, டத்தோ P. காசி அவர்கள் ரொக்கப் பரிசு வழங்க மாணவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கேடயத்தை டத்தோ S. வீரசிங்கம் வழங்க, திரு. M. சின்னதுரை அவர்கள் சான்றிதழை வழங்கினார்கள்.

பிறகு, டத்தோ P. காசி அவர்கள் உரை ஆற்றினார்கள். அதன் பிறகு டத்தோ S. வீரசிங்கம் உரை ஆற்றினார்கள். அவர்களின் உரையில் இருந்து ஒரு பகுதி. “நம் நாட்டின் வளர்ச்சியில் நகரத்தார்களுக்கு பெரிய பங்கு உண்டு. வங்கிகள் இல்லாத காலக் கட்டத்தில் வியாபாரம் செய்வதற்கான முதலீடுகளை செய்து பல கோடீஸ்வரர்களை உருவாக்கியவர்கள். ஒரு பெருமை வாய்ந்த சமுதாயம் இந்த சமுதாயம் நம் நாட்டில் இன்று உள்ள மருத்துவர்களில் 30 சதவிகிதத்தினர் இந்தியர்கள். அவர்களில் நகரத்தார்களின் எண்ணிக்கை கணிசமானது.

ம.இ.க வும் இது போல் தேர்ச்சி பெற்ற இந்திய மாணவர்களை சிறப்பு செய்து வருகிறது. 50 பேர்களில் தொடங்கி இன்று 500 மாணவ மாணவியர் 7A எடுத்து சாதனை படைத்து இருக்கிறார்கள். நம்முடைய மாணவ மாணவியர்கள் விளையாட்டுத் துறையிலும் ஈடுபட வேண்டும்.

டத்தோ P. காசி போன்றவர்கள் நம் சமுதாயத்துக்கு மிக மிக தேவை எத்தனை மொழி தெரிந்தாலும் நல்லது.

உலக ரீதியில் நாம் முன்னேற வேண்டுமானால் அதிகமாக படிக்க வேண்டும். அதிகமான மொழிகளை தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நிகழ்வு மகிழ்ச்சியை தருகிறது. உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

▶

# அழைப்புக்கு நன்றி



**சு**ங்குரும்பை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் பங்குனி உத்திரப் பூஜை கடந்த 1-4-2007 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய சுங்குரும்பை நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு நம் நன்றி.

**தெ**லுக் இந்தான் பேரா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் சித்ரா பௌர்ணமி திருவிழா கடந்த 2-5-2007 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய பேரா நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு நம் நன்றி.

**ஈ**ப்போ நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவில் ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமி வைகாசி விசாக பூஜை கடந்த 30-5-2007 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய ஈப்போ நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கு நம் நன்றி.

**வா**லப்பூர் ஸ்ரீதெண்டாயுதபாணி முத்து மாரியம்மன் நகரத்தார் கோவில் வைகாசி விசாக திருவிழா கடந்த 30-5-2007 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய பாயன்லெப்பாஸ்-வாலப்பூர் நகரத்தார்களுக்கு நம் நன்றி.

**ப**த்து பஹாட் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் அருள்மிகு தண்டாயுதபாணி கோவில் வைகாசி விசாக திருவிழா கடந்த 30.5.2007 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய பத்து பஹாட் நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கு நம் நன்றி.

---

அதனைத் தொடர்ந்து SPM, STPM படிப்பில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு பூங்கொத்து, கேடயம், ரொக்கப் பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

இரவு 7.30 மணி அளவில் இரவு விருந்துடன் நிகழ்ச்சி ஒரு நிறைவை எய்தியது.

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து வழி நடத்தி தந்த திரு. M. பழனியப்பன் மற்றும் அவர் தம் குழுவினருக்கும் நம் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக விழாவுக்கு பொருளாதார ஆதரவு வழங்கி வரும் டத்தோ P. காசி அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



July August -07.pmd 9 9/20/2007, 3:57 PM

# சங்கத்தின் 24வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னதுரை அவர்கள் ஆற்றிய உரை

நமது சங்கத்தின் 24வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நம் சங்க கூட்டங்களையும் நம் கூட்டுறவுக் கழக கூட்டங்களையும் இந்த மண்டபத்தில் நடத்துவதற்கு அனுமதி வழங்கி வரும் நம் தாய்க்கோவிலான செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலின் காரியக்காரர்களுக்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் நம் நன்றி.

பிள்ளையார் நோன்பு, காசி புனிதப் பயணம், PL உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா, புதையல் தேடும் போட்டி, சிங்கப்பூர் சுற்றுலா, தீபாவளி ஒன்று கூடும் விழா, தெலோக் பாத்தெக் கடற்கரை சுற்றுலா நிகழ்ச்சிகளை மிகவும் நன்றாக நடத்திய ஏற்பாட்டுக் குழுவினர்களுக்கு பாராட்டுகளும் நன்றியும்.

உயர்திரு டத்தோ P. காசி அவர்கள், அவர்களுடைய தாயார் PL உமையாள் ஆச்சி அவர்கள் பெயரில், பள்ளித்தேர்வுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நம் மாணவர்களை பாராட்டி ஊக்கப் படுத்துவதற்கான விருது வழக்கும் விழாவிற்கு பல வருடங்களாக பெறும் பணம் செலவு செய்து வருகிறார்கள். டத்தோ P. காசி அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகுக.

நம் சங்க அறங்காவலர்களில் ஒருவரான உயர்திரு G. ராமனாதன் அவர்கள் நம் சங்க கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்காக வெள்ளி 2,000 நன்கொடையாக கொடுத்துள்ளார்கள். நம் சங்க கல்வி நிதிக்கு உயர்திரு டத்தோ SP அண்ணாமலை அவர்கள் நன்கொடையாக வெள்ளி 1001 வழங்கி உள்ளார்கள். இவர்கள் இருவருக்கும் மிக்க நன்றி.

நம் அங்கத்தினர்கள் சிங்கப்பூருக்கு, இலக்கிய விழா மற்றும் சுற்றுலா சென்றிருந்த பொழுது, சிறப்பான வசதிகளை ஏற்பாடு செய்த சிங்கப்பூர் அருள்மிகு தெண்டாயுதபாணி கோவில் நிர்வாகஸ்தர்களுக்கும், சிங்கப்பூர் நகரத்தார் சங்கத்திற்கும், குறிப்பாக சிங்கப்பூர் நகரத்தார் சங்கத் தலைவர் உயர்திரு AR. ராமசாமி அவர்களுக்கும், உயர்திரு சுப. அருணாச்சலம் அவர்களுக்கும், உயர்திரு AL அண்ணாமலை அவர்களுக்கும் உயர்திரு AR அருணாச்சலம் அவர்களுக்கும் சிங்கப்பூர் அருள்மிகு தெண்டாயுதபாணி கோவில் கார்பார் டாக்டர் S. வைரவன் செட்டியார் அவர்களுக்கும், ஸ்ரீ ருத்ர காளியம்மன் கோவில் தலைவர் டாக்டர் R. கருணாநிதி அவர்களுக்கும் நம் நன்றி.

நம் சங்கத்தில் பல உப குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களின் தலைவர்களாக பல அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



July August -07.pmd 10 9/20/2007, 3:57 PM




அலோர்ஸ்டார் DR. KM. S. இராமசாமி-RM விசாலாட்சி (உ.எ: 0440/ப.எ: 238) தம்பதிகளின் மகன் R. சொக்கலிங்கம்-நித்யா தம்பதிகளுக்கு 30-12-2006 அன்று பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு விசாலாட்சி என்று பெயரிட்டுள்ளார்கள்.

பினாங்கு DR. P. சொக்கலிங்கம்-மீனா (உ.எ: 0428-ப.எ: 253) தம்பதிகளின் மகன் பழனியப்பன்-தீபிகா தம்பதிகளுக்கு கடந்த 3.3.2007 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு நவீன் சொக்கலிங்கம் என்று பெயரிட்டுள்ளார்கள்.

***குழந்தைகள் எல்லாச் செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.***

---

சமூக நலன் ஆலோசனை குழுவின் தலைவராக டத்தோ டாக்டர் V. கதிரேசன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் குழுவின் செயல்பாடுகளில் முக்கியமாக உள்ளது குடும்ப வாழ்வில் பிரச்சனைகளை ஏதிர்கொள்ளும் தம்பதிகள், குறிப்பாக புது மணத் தம்பதிகள் தங்கள் பிரச்சனைகளை கலைவதற்கு ஆலோசனை கூறுவதும், திருமணம் புரிய இருப்பவர்களுக்கு தகுந்த வழிகாட்டுதல்களை வழங்குவதும் ஆகும்.

நமது அங்கத்தினர்களின் விவரக் கையேட்டை தயாரிக்கும் குழுவிற்கு உயர்திரு M. மெய்யப்பன் அவர்கள் தலைமையேற்றுள்ளார்கள். புது கையேடும் 19.5.2007ல் நடக்கவிருக்கும் PL உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழாவில் வெளியிடப்படும்.

அனைத்து உப குழு தலைவர்களுக்கும் அங்கத்தினர்களுக்கும் நம் பாராட்டுக்களும் நன்றியும்.

இன்று நம் சங்கத்தின் எழுச்சிப்பாடலை உயர்திரு டத்தோ S.NK. அழகு சுந்தரம் அவர்கள் வெளியிட இருக்கிறார்கள். இந்நதப்பாடலை எழுதிய திருமதி சுசிலா கிருஷ்ணப்பன் அவர்களுக்கு நம் நன்றி. இந்தப் பாடலை சீடி வடிவத்தில் கொண்டு வருவத்கு மிகவும் கடுமையாக வேலை செய்த நம் சங்க துணைத்தலைவர் Y.RM. ஆண்டியப்பன் அவர்களுக்கும் உயர்திரு L. ராமன் அவர்களுக்கும் மிக்க நன்றி. இந்தப் பாடலை பாடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவி திருமதி ஜெயந்தி சோமசுந்தரம் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் நம் நன்றி.

World Philatelic Exhibitionனில் கலந்து முறையே தங்கம், வெள்ளி பதக்கங்களை வென்ற உயர்திரு S. முத்துச்செல்லப்பன் அவர்களுக்கும் அவர்தம் பேத்தியும் உயர்திரு M. ஆறுமுகம் அவர்களுடைய மகளுமாகிய செல்வி சாலினிக்கும் நமது பாராட்டுகள்.

உயர்திரு டத்தோ டாக்டர் N. ஆறுமுகம் அவர்கள் உலக மருத்துவ சங்கத்தின் தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டதிற்கு நமது பாராட்டுக்கள்.



July August -07.pmd 11 9/20/2007, 3:57 PM

நம் சங்கத்தின் பொன்விழா கொண்டாட்டம் டிசம்பர் மாதம் 8,9ஆம் திகதிகளில் கோலாலம்பூர் இஸ்தானா தங்கும் விடுதிகளில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு உறுப்பினர்கள் அனைவரின் ஆதரவு மிக முக்கியம்.

இவ்வருட ஆண்டறிக்கையையும் கணக்கறிக்கையும் மிக நல்ல முறையில் தயாரித்ததற்கு செயலாளர் உயர்திரு KR.P ராமன் அவர்களுக்கும் பொருளாளர் உயர்திரு S. பழனியப்பன் அவர்களுக்கும் நம் சங்கத்தின் செய்திக் கடித ஆசிரியர் உயர்திரு M. மெய்யப்பன் அவர்களுக்கும் நமது நன்றியும் பாராட்டுக்களும்.

இந்த ஆண்டு நம் சங்கத்திற்கு நிதிதிரட்டுவதற்காக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளோம். இதற்கும் அங்கத்தினர் அனைவரும் ஒத்துழைப்பை வழங்க பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம் சங்க உறுப்பினர்களுக்கு இன்னும் பல சேவைகளை வழங்குதற்காக திட்டங்கள் வரையப்பட்டு வருகிறது. தகுந்த கால கட்டங்களில் அவை அமலாக்கம் செய்யப்படும்.

நம் சங்கத்தின் சேவைகளை தரமாக வழங்குவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் சங்க காப்பாளர்களுக்கும் நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும் வட்டார பிரதி நிதிகளுக்கும் உட் கணக்காய்வாளர்களுக்கும் நம் சங்க கட்டிடத்தின் பாதுகாப்பாளருக்கும் எனது உளம் கனிந்த நன்றி.

## வருந்துகிறோம்

பத்து கேவ்ஸ் (தமிழகம் சொக்கநாதபுரம்) திரு. சோம. நாராயணன் (உ.எ: 431/ப.எ: 216) மற்றும் திருமதி சீதாலெட்சுமி இராமநாதன் ஆகியோரின் தாயார் திருமதி சோம. வள்ளியம்மை ஆச்சி அவர்கள் கடந்த 13-5-2007 அன்று தமிழகம் சொக்க நாதபுரத்தில் சிவபதவி அடைந்தார்கள்.

கிள்ளான் திரு. கிருஷ்ணப்பன் (உ.எ: 0246/ப.எ: 183) அவர்களின் மாமியாரும், திருமதி சுசிலாவின் தாயாருமான திருமதி மு. சிந்தாமணி ஆச்சி அவர்கள் கடந்த 21-5-2007 அன்று தமிழகம் மேலைச்சிவபுரியில் சிவபதவி அடைந்தார்கள்.

கோலாலம்பூர் (தமிழகம் பூலாங்குறிச்சி) திருமதி ராம. மீனாட்சி ஆச்சி (உ.எ: N012/ப.எ: 194) அவர்கள் கடந்த 16-6-2007 அன்று கோலாலம்பூரில் சிவபதவி அடைந்தார்கள். இவர்கள் திரு. ராம. சுப்பிரமணியம் (உ.எ: 671/ப.எ: 259), திரு. ராம. ஆவுடைநாதன் (உ.எ: 589/ப.எ: 166), திரு. ராம ராமநாதன் (உ.எ:767/ப.எ: 236), கேப்டன் ராம. தியாகராஜன் உ.எ: 705/ப.எ: 272) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

***பிரிந்தவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.***

## சங்க விவரக் கையேடு வெளியிடும் நிகழ்வில் சங்கத் தலைவர் திரு. M. சின்னதுரை அவர்கள் ஆற்றிய உரை

நண்பர்களே,

நம் சங்க உறுப்பினர் விவரக் கையேடு வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்துள்ள எல்லோருக்கும் நன்றி கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தக் கையேடு தயாரிப்புக் குழுவின் தலைவர் திரு. M. மெய்யப்பன் அவர்களுக்கும் குழுவின் அங்கத்தினர்களாகிய திரு Y. RM. ஆண்டியப்பன், திரு M. பழனியப்பன், திரு. KRP. ராமன், திரு. S. பழனியப்பன், திரு. PL. லக்ஷ்மணன் அவர்கள் அனைவருக்கும் நம் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.

மேலும் இந்தக் கையேடு தயாரிப்பில் பங்கு கொண்டு உதவி செய்த மற்ற செயற்குழு உறுப்பினர்களுக்கும் வட்டாரப் பிரதி நிதிகளுக்கும் மிக்க நன்றி.

கையேட்டின் விபரங்களை திருத்தம் செய்வதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த திரு N. சோமநாதன் அவர்களுக்கும் கையேட்டை குறிப்பிட்ட நேரத்திற்குள் அச்சடித்துக் கொடுத்த திரு G. ரகு அவர்களுக்கும் மிக்க நன்றி.

இந்தக் கையேடு தயாரிப்பு நம் சங்க நடவடிக்கைகளில் மிகவும் பெரிய திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த திட்டம் வெகு சிறப்பாக வெற்றி பெறுவதற்கு, நம் சங்க வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வரும் திரு M. மெய்யப்பன் அவர்கள் பல நாட்கள் இரவு பகலாக சேவை செய்தது எனக்கும் மற்ற சில நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே தெரியும். ஒரு சில நாட்கள் திரு. M. மெய்யப்பன் அவர்களும் மற்றும் சில கையேடு தயாரிப்பு குழு அங்கத்தினர்களும் அச்சகர் திரு G. ரகு அவர்களும் நம் சங்கக் கட்டிடத்தில் இரவு 12.00 மணி வரை இருந்து கையேட்டின் தயாரிப்பில் ஈடு பட்டிருந்தார்கள். இது திரு M. மெய்யப்பன் அவர்களின் சேவைகளில் ஒன்றுதான். இது போல் அவர்கள் மற்ற சங்கத் திட்டங்களிலும் வெகுவாக சேவை செய்து வருகிறார்கள். அவர்களுடைய சேவை நம் சங்கத்திற்கு எப்பொழுதும் அவசியம் தேவையென்று சொல்லி திரு M. மெய்யப்பன் அவர்களுக்கு நம் சங்க உறுப்பினர்கள் அனைவரின் சார்பில் நான் மீண்டும் நன்றி கூறுகிறேன்.

இந்தக் கையேட்டின் தயாரிப்புச் செலவை ஈடு கட்டுவதற்கு நமக்கு விளம்பரங்களின் மூலம் பொருள் உதவி செய்த எல்லா நிறுவனங்களுக்கும் நம் நன்றி.

இந்த விளம்பரங்கள் பெறுவதற்கு உதவி செய்த திரு C. பழனியப்பன் மோகன், Dr. A. ராமனாதன், திருமதி விசாலாட்சி தியாகராஜன், உதவித் தலைவர் திரு Y.RM. ஆண்டியப்பன், செயலாளர் திரு. KRP ராமன், பொருளாளர் திரு. S. பழனியப்பன், சங்க நிர்வாக குழுவின் அங்கத்தினர்களாகிய திரு M. சேதுராமன், திரு. M. மெய்யப்பன், திரு. N. சோமநாதன், திரு. M. பழனியப்பன் மற்றும் திரு. K. பழனியப்பன், திரு G. ரகு அவர்கள் அனைவருக்கும் நம் சங்கத்தின் சார்பில் மிகவும் நன்றி.

இந்தக் கையேட்டை, நம் சங்கத்தின் வளர்ச்சிக்கும் நம் சங்க கூட்டுறவுக் கழகமான Koperasi Thanavaisya Kuala Lumpur Berhadடின் முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக இருந்து வரும் டத்தோ P. காசி அவர்கள் வெளியிட சம்மதம் தெரிவித்ததற்கு நம் நன்றி.

நன்றி வணக்கம்.



July August -07.pmd 13 9/20/2007, 3:57 PM



## புதுமணத்தம்பதிகள்

கோலாலம்பூர் (தமிழகம் ஆத்தங்குடி) திரு CT. நாச்சியப்பன் (உ.எ:587/ ப.எ: 207) - திருமதி உஷா நாச்சியப்பன் (உ.எ: 995/ப.எ: 274) தம்பதிகளின் மகள் செல்வி நாச்சம்மை (எ) வித்யாவுக்கும், பினாங்கு (தமிழகம் அரண்மனை சிறுவயல்) திரு. முரு. லெ. முரு. லெ. லெட்சுமணன் செட்டியார் மகன் செல்வன் லெட்சுமணனுக்கும் கடந்த 27-5-2007 அன்று கோலாலம்பூர் செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில் செட்டியார்கள் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கோலாலம்பூர் (தமிழகம் மிதிலைப்பட்டி) திருமதி மங்களம் திரு. சித. சேது (உ.எ: 969/ப.எ: 189) தம்பதிகளின் மகன் திரு. பழநியப்பன் (எ) மணிகண்டனுக்கும் தமிழகம் ஒ. சிறுவயல் திரு. பெரி. அழகப்ப செட்டியார் மகள் உமையாளுக்கும் கடந்த 11.7.2007 அன்று தமிழகம் ஒ. சிறுவயலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

***புதுமணத் தம்பதிகள் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று இன்பமுடன் பல்லாண்டு வாழ சங்கம் வாழ்த்துகிறது.***

# மணிவிழா

கோலாலம்பூர் (தமிழகம் தேவகோட்டை) டத்தோ டாக்டர் V. கதிரேசன் (உ.எ: 673-ப.எ: 181)-டத்தின் கமலாம்பாள் (உ.எ: 817/ப.எ: 177) தம்பதிகளின் மணிவிழா கடந்த 14.03.2007 அன்று கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோயிலில் விமரிசையாக நடைபெற்றது.

சுபாங் ஜெயா (தமிழகம் குழிபிறை) திரு. பெசாலா மெய்யப்பன் (எ) சோலை - திருமதி தெய்வானை (உ.எ: 29/ப.எ: 254) தம்பதிகளின் மணிவிழா கடந்த 6.5.2007 அன்று கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோயிலில் விமரிசையாக நடைபெற்றது.

கோலாலம்பூர் (தமிழகம் பி. அளகாபுரி) திரு. K. பழனியப்பன்-திருமதி செண்பகவள்ளி (உ.எ: 37/ப.எ: 220) தம்பதிகளின் மணிவிழா கடந்த 29.5.2007 அன்று கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் விமரிசையாக நடைபெற்றது.

## பீமரத சாந்தி

கோலாலம்பூர் (தமிழகம் குழிபிறை) திரு. N. ராமசுவாமி-திருமதி மீனாட்சி (உ.எ:0043/ப.எ: 240) தம்பதிகளின் பீம ரத சாந்தி கடந்த 20-4-2007 அன்று கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் விமரிசையாக நடைபெற்றது.

**மணி விழா மற்றும் பீமரத சாந்தி செய்து கொண்ட தம்பதிகளை சங்கம் வாழ்த்துகிறது.**

# சங்கத்தின் பொன்விழா மற்றும் அனைத்துலக நகரத்தார் மாநாடு (ICN)

# அறிமுக விழா

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் தேதி (1-9-2007) சனிக்கிழமை காலை மணி 8.00 முதல் இரவு மணி 7.00 வரை முழு நாள் விருந்துடன் கூடிய சிறப்பு மிக்க விழாவாக கிள்ளான் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில் கீழ்க்கண்ட நிகழ்வுகள் இடம்பெறும்.

1. **Games:** ***Std 1 - Std 3***
2. **Drawing & colouring:** ***Std 4 to Std 6***
3. **Quiz:** ***Form 1 to Form 3***
4. **Talent time:** ***Age 16 to 21 years***
5. **Treasure Hunt for Couples**
6. திருவாளர் திருமதி போட்டி
7. **Fency Dress:** ***up to age 6***
8. **Motivation Speech**
9. பட்டிமன்றம்
10. **Guessing Game**
11. **Ladies Drama**
12. **Dances**
13. **Lucky Draw**
14. **ICN Official Launch**

இதில் கலந்து கொள்ள விரும்பும் நகரத்தார்கள் நிகழ்ச்சி அன்று காலை மணி 8.00 முதல் மணி 9.00 வரை நிகழ்ச்சி மண்டபத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டியது. போட்டிக்கு தேவையான பொருட்களை உடன் கொண்டு வரவேண்டியது. நிகழ்வு No 1 முதல் No 7 வரை போட்டி நிகழ்வுகளாக நடைபெறும்.

வெளியூர் நகரத்தார்கள் தங்க இடவசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்கும் வசதி தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரி/ தொலைபேசி எண்ணில் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**கோலாலம்பூரில்**
**Malaysian Thanavaisya Association**
**No. 23A, Jalan Pinggir, Off Jalan Ipoh,**
**51200 Kuala Lumpur.**
**Mrs. Lakshmi Tel: 03-4044 0452**

**கிள்ளானில்**

1. **கிட்டங்கி (Klinik Sentosa), No. 37, Jalan Dato Hamzah,**

2. **தண்டாயுதபாணி கோவில் மண்டபம்**

**Dr. A. Ramanathan Tel: 03-3371 6714**

குறிப்பு: நிகழ்ச்சி அன்று காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு பலகாரம், முதலியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரத்தார்கள் அனைவரும் மறவாமல், தவறாமல் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமாய் ஏற்பாட்டுக் குழு சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
*ந. சோமநாதன், ஏற்பாட்டுக்குழுத்தலைவர்*



July August -07.pmd 15 9/20/2007, 3:57 PM

# SHEDDING THOSE EXTRA POUNDS

If you want to remain healthy, you must read this article. If you want to loose weight (ask your doctor if you are not sure) or help somebody to loose weight you must read this article. The purpose of this article is to share my knowledge & experience. I have been successful, so you can shed those extra pounds IF YOU WANT TO.

To loose weight, all you need is **will power** and **time.**

To loose weight

1. Eat 25% less during each meal.
2. Eat smaller portions, but more often. You must try to consume some food / drink every 3 hours (not more, not less).
3. Do not STARVE
   When you starve, you put on weight, you don't loose weight. Starvation induces the body to prepare for famine and thus, store fat for the future.
4. Cut down on rich, fatty food. You do not have to stay away completely from this type of food. When you say you ban a certain type of food, you will tend to think about it more and then eat more than usual of that food so the rule is eat everything BUT IN SMALLER PORTIONS.
5. Reduce your intake of sugar.
6. Eat enough fruits.
7. Drink plenty of water.
8. Exercise six days a week for at least 1 hour each time. **Brisk** walking is good enough.
9. Always have dinner at least 3 hours before bedtime. Sleeping with a full stomach does not allow your body to digest the food properly. This causes bloating. Try not to sleep during the day.
10. Finally, do not think of loosing weight as dieting. Think of it as a change in lifestyle, fitness and eating habits as a whole.

Please remember that you will loose inches first. Weight loss comes after that. All this will be a slow process. Exercising will increase muscles. Muscles weigh more than fat. A good indication of overall weight loss is that clothes feel looser. Do not weigh yourself often and get disappointed. GOOD LUCK!

***Shenbagavalli Palaniappan***

## MALAYSIAN THANAVAISYA ASSOCIATION
## PL. UMAYAL ACHI ACADEMIC EXCELLENCE AWARDS 2007

The seventh annual awards function was once again held at the Tan Sri Soma auditorium, Kuala Lumpur on $19^{th}$ May 2007. Approximately four hundred people witnessed the presentation of the awards to 27 outstanding children of the community. The Deputy Minister for Domestic Trade and Consumer Affairs Dato' S. Veerasingam was the guest of honour,

With the exception of one recipient from Sabah all the others turned up in full force with their family members. One recipient came all the way from Alor Star despite the fact that he had to sit for an examination the following morning. We wish to thank him and the parents in particular for their effort and sacrifice.

For the record this year there were 14 recipients in the UPSR category while all 8 award winners in the SPM / GCE 'O' Level category had obtained 10 A's and above.

Shanmugam Palaniapppan of Masai, Johor walked away with a special award for his record breaking feat of 12 A1's in the SPM examination. The previous record of 10 A1's was set by Meenakshi Alagappa of Seremban in 2006.

In order to encourage students in the Arts stream Shanthi Nadarajah of Kuantan was presented with a merit award for being the first Arts stream student to have scored straight A's (10 A 1's). The patron Datuk P. Kasi who hopes to see more unique achievements in future, has also consented to award the best "overall " student in the SPM category ( the basis of the selection to be announced in due course) from 2008.

The Sangam sincerely hopes that students will strive to enhance their performance to reap these rewards.

All the award winners were escorted to the stage by 6 very charming young girls in coloourful sarees. The recipients were very excited and hardly showed any nerves during the dialogue session. In fact they spoke with confidence and were able to express themselves extremely well.

I wish to thank the Organizing committee and Awards committee members for all their contributions towards the huge success of this event. My thanks is also due to all the others who helped us in one way or the other at the function.

Besides funding this entire event Datuk P.Kasi has been very receptive to all our proposals. Further it must be mentioned that many of his ideas have added great value to this ceremony. Datin P.Malliga Kasi is always there with words of admiration and encouragement for our children.

Finally I wish to record my thanks to Miss.Visali, Miss.Kalyani and Miss.Uma for their untiring services on the stage. My sincere apologies for having omitted their names while expressing my vote of thanks at the function.

***Alvin Palani***

# பிள்ளையார் நோன்பு விளக்கம்



நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய நம் தனவணிகப் பெருமக்கள், தொன்று தொட்டுப் பிள்ளையார் வழிபாட்டை முறைப்படி செய்து வருகிறார்கள். நம் மரபினர் அனைவரும் பொதுவாக வைத்து வணங்கும் விநாயகரை மரகத விநாயகர் என்று கல்வெட்டுகளும் வரலாற்று நூல்களும் குறிக்கின்றன. எடுத்த காரியங்கள் இடையூறின்றி நிறைவேறுதர் பொருட்டுச் செய்யத்தக்க விநாயக வணக்கம், ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல, நகரத்தார்களாலும் மேற்கொள்ளப் பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கொரு முறை மார்கழி மாதத்துச் சுக்கிலபக்ஷ சஷ்டி நாளில், பிள்ளையார் நோன்பு என்னும் பெயரில் குடும்ப விரதமாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார்கள். இவ்வழிபாடு, எந்தக் காலத்தில் இவர்களால் மேற்கொள்ளப் பெற்றது என்று குறிப்பிட முடியாத பழைய காலத்திலிருந்து, நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால், இவர்களுக்கு இறைவன் திருவருள் சித்திப்பது ஒருபுறம் இருக்க, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்டிருந்தால், அப்பிணக்குகள் தீர்ந்து ஒற்றுமை ஆவதற்கும், இது துணையாக இருந்து வருகிறது. பாரத நாட்டு மக்கள் அனைவருக்கும் பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ, அப்படியே, நகரத்தார்களுக்குப் பொங்கலும், பிள்ளையார் நோன்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதவையாய் இருக்கின்றன. புராணங்களில் பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தனவாக ஆவணி மாத்துப் பூர்வபக்ஷச் சதுர்த்தியும் மார்கழி மாதத்துப் பூர்வபக்ஷச் சஷ்டியும் குறிக்கப் பெறுகின்றன. முன்னையது விநாயகப் பெருமான் திரு அவதார நாள். பின்னையது அவர் கஜமுகா சூரசம்ஹாரம் செய்து அடியார்களைக் காத்த நாள். இவ்விரண்டு நாட்களிலும் வழிபாடு செய்வது, இன்ப ஆக்கம் துன்பநீக்கம், இரண்டையும் பெறுவதற்கென்று, பெரியவர்கள் சொல்லுவார்கள்.



July August -07.pmd 18 9/20/2007, 3:57 PM

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை சமூகம் முழுவதிலும் ஒரே அமைப்பில் இருப்பதால் நோன்பு நாள் மாலையில், விநாயகப் பெருமானது திரு உருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளுவித்து நிவேதனத்திற்காக எள், நெல் முதலியனவற்றாலான பொரி வகைகளும், பணியாரம் என்று நகரத்தார்களால் குறிப்பிடுகிற அப்பம் வகைகளும் வெல்லப்பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து, ஆவாரம்பூவால் செண்டு கட்டிச் சுவாமி திருமுன் வைத்து, ஆவாரம் பூவினாலேயே அருச்சித்து, வேழமுகம் ஓதித் தோத்திரம் செய்து, இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியை, வெல்லம் சேர்ந்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து, பசு நெய் விளக்கில் ஏற்றி உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

விநாயகப் பெருமானுக்கு, பொரி, கடலை, அப்பம் முதலியவற்றில் அதிக விருப்பம் என்பதால் அவற்றை நிவேதிதித்தும், இந்த நோன்பு திருக்கார்த்திகை தொடங்கி சதய நக்ஷத்திரம் வரை உள்ள இருபத்தொரு நாளில் அமையும் சஷ்டியில் கொண்டாடப் பெறுவதால் அவ்விருபத்தொரு நாட்களை நினைவு கூறும் வகையில் அமைந்த ஏற்ற இறக்கம் இல்லாத (ஒக்கப்பிறந்தவர் இருவர், உடன் பிறந்தவர் மூவர், செக்கச்சிவந்தவர் ஐவர், செவ்வாழைப்பழம் மூன்று, நமரி வாழைப்பழம் நான்கு, பச்சைப் பாம்புக்குட்டி ஒன்று, படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று ஆக 21.) இருபத்தொரு இதழ்களே உடைய பொன் ஆவாரம்பூவால், அருச்சிப்பதும், துன்ப நீக்கத்தைச் செய்வதாகிய விநாயகப் பெருமானது அங்குசத்தை, நினைவுப்படுத்தும் வகையில் பூச்செண்டை அவர் திருமுன்வைப்பதும், விரத நாள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு ரக்ஷை(நூல்)யாக இருபத்தொரு ரக்ஷைகளைத் திரியாக ஒன்று கூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும் அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச் சுவைப் பொருள்களைக் கூட்டித் திருவருட் பிரசாதமாக உட்கொள்ளுவதும் இந்த நோன்புச் செயல்களில் அமைந்த தத்துவங்கள்.

** காரைக்குடி செல்வி பதிபகத்தார் வெளியீடு செய்துள்ள ஆலய வழிபாடு என்னும் நூலில் திருமதி நாச்சியம்மை சிவராமன் அவர்கள் தொகுத்துள்ள கட்டுரை தொகுப்பிலிருந்து வெளியிடப்படுகிறது. இந்நூலை சங்கத்துக்கு அனுப்பியிருந்த செல்வி பதிப்பக உரிமையாளர் திரு. வீர. சிவராமனுக்கு நன்றி.*



July August -07.pmd 19 9/20/2007, 3:57 PM

# பெரியமலை பயணம்

மிக குறைவான கால அவகாசத்துக்ககுள் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயணத்தை பற்றிய விபரம் உறுப்பினர்களுக்கு மின் அஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

45 பேர் கலந்து கொண்ட இப்பயணம் 15-7.2007 அதிகாலை 5.00 மணிக்கு செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் இருந்து தொடங்கியது. 7.00 மணியளவில் மலாக்காவை அடைந்து அங்கிருந்து படகு மூலம் பெரிய மலையை சென்றடைந்தோம். கடலில் குளியல், 3 நேரமும் அறுசுவை உணவு என்று பொழுது இன்பமாக கழிந்தது. நண்பகல் உணவுக்கு முன்பு பாத்தியா ஓதி வழிபாடும் நடத்தப்பட்டது. மாலையில் மலாக்கா நகர் திரும்பி சன்னாசி மலையில் சுவாமி தரிசனம் செய்து விட்டு இரவு உணவுக்கு பின் புறப்பட்டு இரவு 9.45 மணியளவில் கோலாலம்பூர் நலமே வந்தடைந்தோம்.

இப்பயணத்தை சிறப்பாக ஏற்பாடு செய்த திரு. சின்னவள்ளியப்பன் அவர்களுக்கும், மலாக்காவில் ஏற்பாடுகளை செய்த திரு முருகப்பனுக்கும், பயண ஏற்பாட்டில் உதவி புரிந்த அனைவருக்கும் பயணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி.

## தனவைசிய கூட்டுறவு கழகச் செய்தி

கூட்டுறவு கழகத்தின் மூலம் நம்மவர்களின் ஸ்நேக்ஸ் வகை உணவு வகைகள் விற்கப்பட்டு வருவது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்று. இதைத் தொடர்ந்து திருமண அழைப்பு கார்டுகள் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளது. லவ்லி வெட்டிங் கார்ட்ஸ் அச்சக நிறுவனம் மூலம் இவைகள் விற்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு கழக உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட சலுகை விலையில் இக்கார்டுகள் விற்கப்படும்.

| கார்டின் அளவு | ஒரு கார்டின் விலை |
|---|---|
| 10” x 7” | RM 0.35 |
| 6” x 8” | RM 0.35 |
| 14” x 7” | RM 0.55 |
| 2” x 9” | RM 0.55 |

அச்சுக் கட்டணம் 1,000 கார்டுகள் வரை RM 250.00

இக்கார்டுகள் தேவைப்பட்டுவோர் கூட்டுறவு கழக செயலாளர் திரு. மா. மெய்யப்பன் அவர்களை 012-2359440 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

# TOUR TO MALAYSIA AND SINGAPORE FROM INDIA AT SPECIAL RATE

Malaysian Thanavaisya Association is organizing a group Tour for Nagarthar's in India to participate in International convention of Nagarathar's and to visit Malaysia and Singapore.

This package is very attractive which is inclusive of Food, Accommodation, transport, visa charges and insurance at a cost of INR30,000.00 for Malaysia and INR40,000.00 for Malaysia and Singapore. This is a real value for money tour. Registration will be on first come first basis and closing date in India is 15th August 2007. Hurry up and inform your friends and relatives to make use of the opportunity.

We are in the midst of making some arrangements for delegates from other countries.
For further details Please contact, preferably by e-mail and details will be sent:

## மலேசியா சிங்கப்பூர் சுற்றுலா

இந்தியாவில் உள்ள நகரத்தார்கள் அனைத்துலக நகரத்தார் மாநாட்டில் கலந்து கொள்ள வசதியாக மிகக் குறைந்த கட்டணத்தில் இந்த சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆறு நாள் மலேசியா சுற்றுலாவுக்கு ரூபாய் 30.000 கட்டணம், 10 நாள் மலேசிய சிங்கப்பூர் சுற்றுலாவுக்கு ரூபாய் 40,000 கட்டணம். இக்கட்டணத்தில் விமான கட்டணம் தங்கும் விடுதி, உணவு, விசா கட்டணம், காப்புறுதி உள்ளூர் பயண கட்டணம் மாநாட்டுக் கட்டணம் அத்தனையும் அடங்கும். பதிந்து கொள்ள கடைசி தேதி 15-8-2007. குறைவான இடங்களே உள்ளதால், கலந்து கொள்ளவிரும்பும் உங்கள் நண்பர் மற்றும் உறவினர்களை உடனடியாக கீழ்க்கண்டோரை தொடர்பு கொள்ளச் சொல்லவும்.

| | | |
|---|---|---|
| Ir.RM.Subbiah | 012-2181903 | subbiahrm@yahoo.com |
| M.Sethuraman | 019-3819673 | sethu.manickam@cimb.com |
| AR.Subramaniam | 012-3755167 | arspmaniyam@gmail.com |
| M.Ganesan | 013-3402978 | ganmuru@streamyx.com |

# புதிய உறுப்பினர்கள்

| M.No. | Name and Address |
|---|---|
| 1095 (O) | M.Muthaia Chettiar<br>37-B, 3rd Floor, Penang Street, George Town<br>10200 Penang Tel:04-2620590 |
| 1096 (L) | Muthiah @ Palaniappan. M<br>37-B, 3rd Floor, Penang Street, George Town,<br>10200 penang. Te: 04-2620590 |
| 1097 (O) | Palaniappan @ Thanneermalai<br>93 Persiaran Perdana 5, Kulim Perdana,<br>Kulim Hi-Tech Park. 09000 Kulim. Tel: 04-4033436 |
| 1098(O) | Ramanathan Nachiappan<br>T1-04-09 Treasure Ville Lintang Thean Teik<br>Bandar Baru Ayer Itam, 11500 Penang. Tel: 04-828 4084 |
| 1099 (L) | PL Sundaram<br>19, Jalan Taman Senangin, Taman Senangin<br>09000 Kulim. Tel:04-4891564 |
| 1100(O) | A.Muthukaruppi,<br>740 Jalan S2 K19, Vision Homes. Seremban 2<br>70300 Seremban. Tel: 06-601 3974 |
| 1101 (O) | Vijaya A/P Subramaniam<br>10, Jalan Bakong, Off Jalan Telok Pulai, 41100 Klang<br>Tel: 013-2604234 |
| 1102 (L) | Narayanan Ramasamy<br>No.3 Jalan Puteri 10/19, Bandar Puteri,<br>Puchong 47100. Tel: 03-80683326 |
| 1103 (L) | VR.Vellachi<br>No.5, Jalan MJ 11, Taman Merdaka Jaya, Batu Berendam<br>75350 Melaka. Tel: 06-3174496 |
| 1104 (L) | RM Chockalingam S/O Dr. KMS.Ramasamy<br>G-3-19 Taman Sri Selima, 14000 Penang. Tel :012-4936492 |

(O) *Means Ordinary Member*
(L) *Means Life Member*